RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்




OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22256

# தமிழ் சமுதாயத்தில் இறைவழிபாடு

**இரா. ரெமிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தென்திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்க்கோயில், கன்னியாகுமரி-629002 தமிழ்நாடு, இந்தியா

# Worship of God in Tamil Society

**R. Remitha** [a, *]

[a] Department of Tamil, South Travancore Hindu Colledge, Nagarcoil, Kanyakumari-629002, Tamil Nadu, India

* Corresponding Author: ramalingamremitha@gmail.com

Received: 26.09.2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

The religious traditions found in the Tamil community are very old. Moreover, some of the worship has been taking place in the Tamil community since the Sangam age. Through these, the Tamil community excels in the traditions of worship. In Sangam age Tamil Nadu, temples were places of worship and festivals. The cities were places where the temples were established, and the tradition of being called "temples" arose. "Temple" refers to Thiruvarangam for Vaishnavas and Chidambaram for Saivas. Silapathikaram gives a detailed account of the temples and shrines taken by various deities in the town of Pukhar, which is Kaveripumpattinam. There was a "Kamavel Kottam (Temple of Cupid)" at Sangam port, where the Cauvery merges with the sea. On the cremation ground too, small deities were erected and poojas were performed. The demonic deity Idakini was worshipped in the "cremation ground." It was also named "Chakravala Kottam". The temples of the Pandiyan period have excellent architecture. They can be divided into Cave temples and Katrali (Monolithic temples). Ilango Adigal refers to a Thirumal temple on the banks of Vaigai in Madurai city. He gives the name of the God who is seated there as Neetuneer Vaigai Nedumal. The temple at Thiruparankundram, one of the six temples of God Muruga, has many specialties.

**Keywords:** Worship, Tamil Community, Murugan, Thirumal

## முன்னுரை

தமிழ் சமூகத்தில் காணப்படும் இறைவழிபாட்டு மரபுகள் மிகவும் பழமையானதாக உள்ளது. மேலும் சில இறைவழிபாடுகள் சங்ககாலம் முதல் தமிழ் சமூகத்தில் நடைபெற்று வருகிறது. இவற்றின் மூலம் தமிழ் சமூகம் வழிபாட்டு மரபுகளில் சிறந்து விளங்குகிறது (Balusamy, 1988). சங்ககாலத் தமிழகத்தில் திருக்கோயில்கள் வழிபாட்டிடங்களாகவும் விழாக் களன்களாகவும் நிலவியிருந்தன (Gandhi, 2003). "கோயில்" என்பது அரண்மனை என்ற பொருளில் சிலப்பதிகாரத்தில் வருகிறது. பதிற்றுப் பத்தின் இறுதிப் பதிகம் பட்டத்தரசியைக் "கோயிலாள்" என்று வழங்குகிறது. இல்லத்தரசியை "இல்லாள்" என்பது போன்ற வழக்கு இதுவாகும். ஆனால் விரைவில் "கோயில்" என்பது ஆலயத்திற்குப் பெயராக வழங்கவும் அரண்மனையைக் குறித்த மரபு நின்று விட்டது. இறைவன் எழுந்தருள் செய்யும் இடத்தைக் "கோயிலாழ்வார்" என்று பெயர் குறித்து வழங்கினர்.

## வைணவ மரபு

கோயில் நிலைபெற்று விளங்கிய நகர்களும் "கோயில்" என்று அழைக்கப்படும் மரபும் தோன்றியது. "கோயில்" என்பது வைணவார்களுக்குத் திருவரங்கத்தையும் சைவார்களுக்குச் சிதம்பரத்தையும் குறிக்கும். திருவரங்கத்து எம்பெருமானை "கோயிற்பிள்ளை" என்று பெரியாழ்வார் அழைக்கிறார். ஸ்ரீகோயில் என்று ஆலயங்களையும் ஸ்ரீகோயில் வாரியம் என்று அவற்றைப் புறங்காத்து வந்த குழுவினரையும் பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம். அரசார்கள் பெரிய ஆலயங்களைத் தமது அரண்மனை போன்றே அகநகரும் புறநகரும் அகழியும் மதிலுமாக எழுப்பினார். அரசனைக் கடவுளின் பிரதிநிதியாகக் கொண்டு "திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று பேசுகின்ற நிலை பரவியபோது பிரதிநிதியின் அரண்மனைக்கு மேலாக உண்மைத் தலைவனின் கோயில் அமைய வேண்டும். அவ்வாறே சோழன் கோச்செங்கணான் சிவபெருமானுக்கு எழுபது பெருங்கோயில்களையும் திருமாலுக்குக் குன்றமன்னதோர் மாடக் கோயிலையும் எழுப்பினான். இதனைத் திருமங்கையாழ்வார் திருநறையூர்ப் பதிகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சங்க காலத்துக் கோயில்கள் பெரும்பாலும் சுட்டச்செங்கற்களாலும் மரங்களாலும் கட்டப்பட்டன.

"சுடுமண் ஓங்கிய நெடுநகார் வரைப்பின்"

என்று பெரும்பாணாற்றுப்படையில் வருவதைக் காணலாம். அவற்றில் வெண்சுதையாலான பிரதிமைகள் அழகுறப் பதிக்கப்பெற்றிருந்தன (Rasamanikam, 1947). இத்தகைய கோயில்கள் வழிபாட்டிடங்களாக விளங்கின என்பதற்குப் பண்டைய நூல்கள் ஆதாரமாகவுள்ளன.

## சேரநாட்டுப் பழங்கோயில்கள்

ஆடகமாடத்து அறிதுயில் அமார்ந்தோன் கோயிலை இளங்கோ அடிகள் குறிப்பிடுகிறார். ஆடகமாடம் என்பது "திருவனந்தபுரம்" என்பார் அரும் பதவுரையாசிரியார். இரவிபுரம் என்றும் கூறவர். சேரன் செங்குட்டுவன் அச்சேடத்தை அதாவது திருவருட் பிரசாதத்தைத் தன் தலைமீது கொள்ளாது புயங்களில் தாங்கிக் கொண்டான். தலைமீது சிவபிரானுடைய சேவடிப் பிரசாதத்தைச் சுமந்ததால் அவ்வாறு புயங்களில் திருமால் வரவிட்ட மாலைப் பிரசாதத்தை ஏற்றுக் கொண்டான். ஆடகமாடத்து அறிதுயிலமார்ந்தோன் திருக்கோயிலில் பூசை புரிந்தவன் பெயார் "சேடக்குடும்பி" என்பது வரந்தரு காதையால் அறியப்படுகிறது. செங்குட்டுவன் எடுப்பித்த பத்தினிக் கோட்டமும் பழம் பெருமை வாய்ந்தது. பத்தினிக் கோட்டத்தைக் கட்டிய முறையினை இளங்கோவடிகள் மிகச்சிறப்பாகக் கூறியுள்ளார். வைதிகர்கள், வேள்வியாசான், சோதிடார், கம்மியர், மற்றும் சிற்பாசாரியார் ஆகியோர் கூடிப் பத்தினிக் கோட்டம் அமைத்தனார். அஃது பால்பெற வகுக்கப்பட்டது. அதாவது கருநிலையும் பகுதி மண்டபமும் பெருமண்டபமும் என்ற அங்கங்களைக் கொண்டதாய்க் கட்டப்பட்டது. பத்தினிக் கடவுளின் திருவுருவத்தைக் "கைவினை முற்றிய தெய்வப் படிமம்" என்று சிறப்பிக்கிறார். அப்படிமத்துக்கு அணிகலன்களைப் பூட்டி அழகு செய்தனர். பூப்பலியாகிய அருச்சனை புரிந்தனர். காப்புக்கடை நிறுத்தினர். அதாவது திக்தேவதைகளை உரிய இடங்களில் அழைத்தனர். யாக சாலையில் வேள்வி இயற்றினர். இவ்வாறு பத்தினிக் கடவுளை நிலை நிறுத்தினர். அதாவது திருப்பிரதிஷ்டை செய்தனர். திருப்பிரதிஷ்டையானது "கடவுள் மங்கலம்" என்றழைக்கப்பட்டது. இக்கோயில் "மங்கல மடந்தை கோட்டம்" என்றும் பெயரைப் பெற்றது. அங்கு நித்தல் விழாவணி நிகழ்த்தப் பெற்றது.

## சோழநாட்டுப் பழங்கோயில்கள்

சிலப்பதிகாரத்தில் திருவரங்கம் பெரிய கோயில் மிகவும் புகழப் பெற்றுள்ளது. காவிரிப்பூம்பட்டினமாகிய புகார் நகரில் பல்வேறு கடவுளார்க்கும் எடுத்த கோயில்களையும் கோட்டங்களையும் பற்றிச் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது. காவிரி கடலோடு கலக்கும் சங்கமுகத்துறையில் "காமவேள் கோட்டம்" இருந்தது. இது மன்மதனுக்குக் கட்டப்பெற்றது. இக்கோயிலுக்கு அருகில் சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற தடாகங்கள் இருந்தன. இவற்றில்

மூழ்கிக் காமவேள் கோட்டத்தைத் தொழுதால் கணவரைப் பிரிந்தோர் தம் கணவரோடு விரைவிற் பொருந்தி இம்மையிலும் மறுமையிலும் இன்பம் எய்துவார்.

## பாசண்டம்

பாசண்டம் என்றால் வேதநெறிக்கு முரண்பட்டதான தருக்க நூல்களின் கோட்பாடாகும். இவை 96 வகைப்பட்டது என்று திவாகர நிகண்டு கூறும். இந்த சாத்திரங்களைப் பயின்றதால் "மகாசாத்திரன்" என்றும் பாசண்டச் சாத்தனுக்கு ஒரு பெயர் உண்டு. இக்கோயிலில் பாடு கிடந்தால் பலன் கிட்டும் என்றும் நம்பினார். பாடு கிடத்தல் என்றால் வரம் வேண்டி உண்ணாதிருத்தலாம்.

## சக்கரவாளக் கோட்டம்

சுடுகாட்டிலும் சிறுதெய்வக்கோயில்கள் எழுப்பப்பெற்றுப் பூசைகள் நடைபெற்றன. "சுடுகாட்டுக் கோட்டத்தில்" இடாகினி என்ற பேய்த் தெய்வம் வணங்கப்பெற்றது. இதற்கு "சக்கரவாளக் கோட்டம்" என்ற பெயரும் வழங்கியது. இதைச்சுற்றிலும் உயார்ந்த மதில்கள் எழுப்பப் பெற்றன. ஆங்கு நான்கு வாசல்கள் திறக்கப் பெற்றன. அவற்றிற்கு செழுங்கொடி வாயில், நலம்கிளர் வாயில், வெற்றிடை வாயில், பூதவுருவத்தின் மண்ணீடு நின்ற வாயில் என்ற பெயர்கள் விளங்கின.

## பாண்டிநாட்டுப் பழம்பெருங்கோயில்கள்

பாண்டியார் காலத்து கோயில்கள் மிகச்சிறந்த கட்டிடக் கலையினை கொண்டுள்ளது. அவற்றை குடைவரைக் கோயில்கள், கற்றளிகள் என இருவகையாகப் பிரிக்கலாம். மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் காணப்படும் குகைக்கோயில்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## திருமாலிருஞ்சோலை

அழகர்மலை என்று போற்றப்பெறும் இத்தலம் சங்க காலத்தில் "திருமால்குன்றம்" என்றழைக்கப்பட்டது. திருமாலின் திருமேனியாகவே இம்மலையைப் பழந்தமிழார் போற்றினார். இதனைத் திசை நோக்கித் தொழுதனார் என்று பரிபாடல் கூறும். புண்ணிய சிரவணம், பவதாரிணி, இஷ்டசித்தி என்ற பொய்கைகள் இருந்தன. புண்ணிய சிரவணத்தில் நீராடினால் "விண்ணவார் கோமான் விழுநூல் எய்துவார்". அதாவது இந்திரன் இயற்றிய இந்திர வியாகரணத்தின் அறிவு உண்டாகும். பவதாரிணியில் நீராடினால் பழம்பிறப்பை உணருவார். இஷ்ட சித்தியில் நீராடினால் நினைத்தன எல்லாம் கைகூடும். மலையின் சிகரத்திலுள்ள பிலத்திருந்து வற்றhது பெருக்கெடுக்கும் சிலம்பாறு திருமாலுறையும் கோயிலருகில் பாய்ந்து செல்கிறது. அதற்கு நூபுரகங்கை என்ற பெயர் வழங்கி வருகிறது. அதன் கரையில் "இயக்கி" ஒருத்தி காவலாக இருக்கிறாள். அவளுக்கு "வரோத்தமை" என்ற பெயரும் உண்டு. அழகார் திருக்கோயிலில் "புள் அணி நீள் கொடிப் புணார் நிலை" என்ற கொடிமரம் உயார்ந்து விளங்குகிறது. அக்கோயிலினுள் நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறhன். இங்கு நம்பி மூத்தபிரான் என்ற பலதேவருக்கும் கோயில் இருந்தது. சிலப்பதிகாரத்திலும் பரிபாடலிலும் இத்திருக்கோயில் பற்றிய அரிய செய்திகளைக் காணலாம்.

## கூடலழகர் திருக்கோயில்

மதுரை மாநகரில் வையைக்கரையிலுள்ள திருமால்கோயில் ஒன்றினை இளங்கோ அடிகள் குறிப்பிடுகிறார். நீடுநீர் வையைநெடுமால் என்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைப் பெயர் கூறுகிறார். மாதரி என்ற இடைக்குல மடந்தை ஆய்ச்சியார் குரவை முடிந்ததும் வையைக்

கரையிலுள்ள நெடுமாலைப் பூசிப்பதற்குச் சென்றாள் என்று கூறப்படுகிறது. ஈண்டு “நீடுநீர்வையை நெடுமால்” என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியார் “ஸ்ரீஇருந்தவளமுடையார்” என்று விளக்கம் எழுதினார். அடியார்க்கு நல்லார் “அந்தரவானத்து எம்பெருமான்” என்று விளக்கினார். இன்றும் கூடலழகர் திருக்கோயில் அஷ்டாங்க விமானத்தின் அந்தர வானத்தில் சயன திருக்கோலத்தில் எம்பெருமான் காட்சியளிக்கிறார். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூடலழகருக்குத் திருவிழாக்கள் எடுத்தான். ஆவணித்திருவோணத்தில் கூடலழகருக்குச் சிறப்பு விழாச் செய்தான். மாங்குடி மருதனார் தாமியற்றிய மதுரைக் காஞ்சியில் கூடலழகரைத் துவரைக்கோமான் என்று பெயார் குறிப்பிடுகிறார். கூடலழகர் இருந்தையூர் அமார்ந்த செல்வன் என்று போற்றப்பட்டார். இருந்தவளமுடையார் ஊராதல் நோக்கி இருந்தையூர் என்று பெயர் பெற்றது.

## திருப்பரங்குன்றம்

பரிபாடலில் முருகனுக்கு எட்டுப் பாடல்கள் உள்ளன. சிவனும் அயனும் அரியும் பன்னிருவார் ஆதித்தரும் அமரரும் அவுணரும் தெய்வமுனிவரும் பிறரும் முருகனைக் காண மண்ணுலகில் வந்து உறையும் இடம் திருப்பரங்குன்றம் ஆனபடியால் “அது இமயத்தை ஒக்கும்” என்று கூறப்படுகிறது. இவ்வாறு நல்லந்துவனார் வருணிக்கிறார். மற்றும் மக்கள் முருகனுக்குரிய பூசைப் பொருள்களையும் காணிக்கைப் பொருள்களையும் கொண்டு வருவதாகவும் குறித்துள்ளார். மக்கள் திருப்பரங்குன்றத்திற்கு வந்து முருகவேளை இசையோடும் தாளத்தோடும் பாடிப்போற்றுகிறார்கள் என்கிறார் நல்லழிசியார் என்ற சங்கப் புலவார். “பூந்தாரான் குன்று” எனப் பரிபாடல் இத்தலத்தைக் குறிப்பிடுகிறது. தெய்வயானை முருகன் திருமணம் நிகழ்ந்த இடமாகப் பரிபாடல் இத்தலத்தைக் குறிப்பிடுகிறது. திருமுருகாற்றுப்படை கொண்டு முருகனுக்கு எடுக்கப்பட்டத் திருக்கோயில்கள் பற்றி அறியமுடிகிறது. திருச்சீரலைவாய், (திருச்செந்தூர்) திருஆவிநன்குடி, (பழனி), திருவேரகம், (வேளிமலை), திருப்பரங்குன்றம் என்பவை அவையாகும். மதுரையிலுள்ள சிவாலயத்தையும் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். “ஆலவாய் அவிர்சடைக்கடவுள்” என்று சிவபிரானைக் குறித்து அவன் கூத்தாடும் வெள்ளியம்பலத்தையும் அவார் குறிப்பிடுகிறார். சங்க காலத்தவனான சோழன் கோச்செங்கணன் சிவபெருமானுக்கு மாடக் கோயில்கள் பலவற்றை எழுப்பினான்.

## திருவேங்கடமலை

தமிழகத்தின் வட எல்லையாகத் திகழ்ந்த திருவேங்கடம் என்னும் தெய்வமாமலை சங்கத்தொகை நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருவேங்கடமலைமீதுள்ள திருமலைக் கோயிலை இளங்கோவடிகள் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆங்கே கோயில் கொண்டு நின்ற திருக்கோலத்திலுள்ள திருமாலின் எழிலைக் கவினுறப் பாடியுள்ளார் அவர்.

## முடிவுரை

“கோயில்” என்ற சொல்லுக்கு வைணவர்களும், சைவர்களும் இருவேறு பொருள் கொண்டிருந்தனார். பண்டைக் கால மன்னார்கள் தங்கள் அரண்மனைப் போன்றே கோயில்களையும் கட்டினர். கோயில் சுட்ட செங்கற்களாலும், கல்லினாலும் கட்டப்பட்டன. சேரநாட்டின் பத்தினி வழிபாடு சிறப்புற்றிருந்தது. செங்குட்டுவன் கட்டிய “பத்தினிக்கோட்டம்” பழம் பெருமை வாய்ந்தது. சோழநாட்டுக் கோயில்கள் பற்றிய பல செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. புகார் நகரில் பல கோயில்கள் இருந்ததற்கான சான்றுகள் பல உள்ளன. பாண்டி நாட்டுக் கோயில்கள் சிறந்த கட்டிடக்கலையுடன் திகழ் ந்தது. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் கூடலழகருக்குத் திருவிழாக்கள் எடுத்தான். முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ளக் கோயில் பல சிறப்புக்களைப் பெற்றதாகும். இத்திருத்தலம் இமயத்திற்கு சமமானதாகக் கருதப்படுகிறது.

## References

Balusamy, N. (1988) Valviyar Kalanjiyam, Tamil University, Thanjavur, India.

Gandhi, K. (2003) Tamilar Palakavalakangalum Nambikaikalum, International Institute of Tamil Studies, Chennai, India

Rasamanikam, R., (1947) Eighteen Lesser Texts (Origin and Text), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License